# யூன்– 22 – வெள்ளி

**புனித பவுலினுஸ்**

**“உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்” மத்.6:21**

## முதல் வாசகம் : 2 அரசர் 11 : 1 – 4, 9 – 18, 20

அந்நாட்களில் அகசியாவின் தாய் அத்தலியா தன்மகன் இறந்துவிட்டதைக்கண்டு கிளர்ந்தெழுந்து அரச குடும்பத்தார் அனைவரையும் கொன்றாள். அரசன் யோராமின் மகளும், அகசியாவின் சகோதரியுமான யோசேபா அகசியாவின் மகன் யோவாசைத் தூக்கிக்கொண்டுபோய் ஒளித்துவைத்தாள். அவன் கொல்லப்படவிருந்த அரசிளம் புதல்வர்களில் ஒருவன். அவனையும் அவன் செவிலித்தாயையும், தனது பள்ளியறையினுள் அத்தலியாவின் பார்வையிலிருந்து யோசேபா மறைத்து வைத்தாள். எனவே அவன் உயிர் தப்பினான்.அவன் ஆறு ஆண்டுகள் அவளோடு ஆண்டவரின் இல்லத்தில் தலைமறைவாய் இருந்தான். அந்நாள்களில் அத்தலியாவே நாட்டை ஆண்டு வந்தாள்.ஏழாம் ஆண்டில், அரச மெய்காப்பாளர், அரண்மனைக் காவலர் ஆகியோரின் நூற்றுவர் தலைவர்களை குரு யோயாதா வரவழைத்து ஆண்டவரின் இல்லத்திற்குள் கூட்டிச்சென்றார். அங்கு அவர் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அக்கோவிலில் அவர்களை ஆணையிடச் செய்து அரசனின் மகனை அவர்களுக்குக் காட்டினார்.குரு யோயாதா கட்டளையிட்டுக் கூறிய அனைத்தையும் நூற்றுவர் தலைவர்கள் செய்தனர். ஓய்வு நாளில் விடுப்பில் செல்வோர், பணியேற்போர் ஆகிய தங்கள் வீரர்கள் அனைவரையும் கூட்டிக்கொண்டு குரு யோயாதாவிடம் வந்தனர்.அவர் ஆண்டவரின் இல்லத்தில் இருந்த தாவீது அரசரின் ஈட்டிகளையும் கேடயங்களையும் நூற்றுவர் தலைவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.காவலர், கையில் படைக்கலன் தாங்கி, திருக்கோவிலின் தென்புறம் தொடங்கி வடபுறம்வரை, பலிபீடத்தையும் திருக்கோவிலையும் அரசனையும் சூழ்ந்து நின்றுகொண்டனர்.பின்பு அவர் இளவரசனை வெளியே கூட்டி வந்து அவனுக்கு முடிசூட்டி, உடன்படிக்கைச் சுருளை அளித்தார். இவ்வாறு அவன் திருப்பொழிவு பெற்று அரசனானான். அனைவரும் கைதட்டி ”அரசர் நீடூழி வாழ்க!”என்று முழங்கினர்.மக்களும், காவலரும் எழுப்பிய ஒலியை அத்தலியா கேட்டு ஆண்டவரின் இல்லத்தில் கூடியிருந்த மக்களிடம் வந்தாள்.மரபுக்கேற்ப, அரசன் தூணருகில் நிற்பதையும், படைத் தலைவர்களும் எக்காளம் ஊதுபவர்களும் அவனருகில் இருப்பதையும், நாட்டின் எல்லா மக்களும் மகிழ்ச்சி கொண்டாடி எக்காளம் ஊதுவதையும் கண்டாள். உடனே அவள் தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, ”சதி! சதி!” என்று கூக்குரலிட்டாள்.அப்பொழுது குரு யோயாதா படைகளுக்குப் பொறுப்பேற்றிருந்த நூற்றுவர் தலைவர்களை நோக்கி, ”படையணிகளுக்கு வெளியே அவளைக் கொண்டு செல்லுங்கள். அவளை எவனாவது பின்பற்றினால் அவனை வாளால் வெட்டி வீழ்த்துங்கள்” என்று கட்டளையிட்டார். ”அவளை ஆண்டவரின் இல்லத்தினுள் கொல்லலாகாது” என்றும் கூறியிருந்தார்.எனவே அவர்கள் அரண்மனையின் குதிரை நுழைவாயிலை அவள் அடைந்தபொழுது, அவளைப்பிடித்தனர். அங்கே அவள் கொல்லப்பட்டாள். பின்பு யோயாதா, ஆண்டவர் ஒருபக்கமும், அரசன், மக்கள் மறுபக்கமுமாக அவர்களிடையே உடன்படிக்கை செய்து வைத்தார். இதன்மூலம் அரசனும் மக்களும் ஆண்டவரின் மக்களாய் இருப்பதாக ஏற்றுக்கொண்டனர். அவ்வாறே அவர் அரசனுக்கும் மக்களுக்குமிடையே உடன்படிக்கை செய்து வைத்தார்.பிறகு நாட்டிலுள்ள மக்கள் எல்லாரும் பாகாலின் கோவிலுக்குச்சென்று பலிபீடங்களையும் சிலைகளையும் தகர்த்தெறிந்தனர் பாகாலின் அர்ச்சகன் மத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொலைசெய்தனர். பிறகு குரு ஆண்டவரின் இல்லத்தில் காவலரை நிறுத்தி வைத்தார். நாட்டின் எல்லா மக்களும் மகிழ்ச்சி கொண்டாடினர். அத்தலியா வாளால் அரண்மனையில் கொல்லப்பட்டபின் நகரில் அமைதி நிலவியது.

**பதில்பாடல் :** ஆண்டவர் சீயோனைத் தம் உறைவிடமாக்க விரும்பினார்.

## நற்செய்தி : மத்தேயு 6 : 19 – 23

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும் திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால், விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள் அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை.உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.”கண்தான் உடலுக்கு விளக்கு. கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும். அது கெட்டுப் போனால், உங்கள் உடல் முழுவதும் இருளாய் இருக்கும். ஆக. உங்களுக்கு ஒளிதரவேண்டியது இருளாயிருந்தால் இருள் எப்படியிருக்கும்!“என்றார்.

**தியானம்:** “பொருள் ஆசையே அனைத்து தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள்மேல் வருவித்துக் கொள்கின்றார்கள்” (1திமொ.6:10) என்று விவிலியம் கற்றுக் கொடுக்கின்றது. செல்வத்தைச் சேர்க்க விரும்புகின்றவர்கள் சோதனையாகிய கண்ணியில் சிக்கிக் கொள்கிறார்கள், அறிவீனமான, தீமை விளைவிக்கக்கூடிய பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்துவிடுகின்றார்கள். இவை மனிதரை கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்துபவை என்பதை திருத்தூதர் பணிகள் நூலில் வரும் அனனியாவின் சாவு நமக்கு உணர்த்துகின்றது (தி.ப.5:1-10). நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவை அணுகிய ஒருவரைப்பார்த்து இயேசு சொன்னார், “உமக்கு இன்னும் ஒன்று குறைவுபடுகின்றது. உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும் அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர் என்றார். ஆனால் இதனைக்கேட்ட அந்த மனிதர் வருத்தமுற்றார். இதனைக் கண்ட இயேசு சொன்னார், செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது (லூக்.18:18-25) என்று. எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது என்று சொல்லிய இயேசு அறிவற்ற செல்வந்தன் என்ற உவமையைக் கூறுகின்றார். அந்த உவமையில் வரும் மனிதரைப் பார்த்து இயேசு கேட்டார் அறிவிலியே! (முட்டாளே) இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்? என்று. இந்த உண்மையை அறிந்த தூய பவுலடியார் சொல்லுவார், “உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகின்றேன்” (பிலி 3:8) என்று. கிறிஸ்துவே நமது ஒப்பெற்ற செல்வம் என்று அவரை உறுதியாக சிக்கெனப் பிடிக்கும் போது இந்த உலகத்தின் செல்வங்கள் நமக்கு ஒரு பொருட்டாக கருதமாட்டோம். இந்த உலகத்தின் செல்வங்களை நமது வாழ்வின் மையமாக கொண்டு வாழும்போது கிறிஸ்துவை நாம் இழந்து விடுகின்றோம். எனவே யாரை தெரிந்து கொள்ளப்போகின்றோம்? கிறிஸ்துவையா? அல்லது செல்வத்தையா? என்பது நமது கைகளில் உள்ளது.